[1996 ஆகஸ்ட் 10

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

வினா எண் *163*, திரு. ஜி. நிஜாமுதீன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

163--

மீன் பிடித் துறைமுகம் கட்டுதல்

1784*--திரு. ஜி. நிஜாமுதீன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாகப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாகப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பது குறித்து பெங்களூர், மத்திய கடலோர பொறியியல் நிறுவனம் ஏப்ரல் மாதம் நாகப்பட்டினத்திற்கு வருகை தந்து, துறை அதிகாரிகளுடன் கூட்டாய்வு செய்தனர். அதன் பிறகு மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு உரிய இடம் தேர்வு செய்ய அங்கு 'மாதிரி ஆய்வுகள்' மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாதிரி ஆய்வுகள் நடத்திய பிறகு நாகப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்டுவது குறித்து பரிசீலித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. வ. அப்துல் நாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு, இதற்கு கால நிர்ணயம் செய்து முடிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிப்பீடு பற்றி ஆய்வு செய்த பின்பு அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.